

# 16

# ஸுன்னாவின் முக்கியத்துவம்



இஸ்லாத்தில் அல்குர்ஆனை அடுத்து இரண்டாவது மூலாதாரமாக ஸுன்னா காணப்படுகின்றது. அல்குர்ஆனின் அடிப்படையில் வாழ்ந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வையும், வாக்கையும் ஸுன்னா என வரைவிலக்கணப்படுத்தலாம். ஸுன்னாவை ஹதீஸ் என்றும் அழைப்பதுண்டு.

ஸுன்னா இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமாகும் என்பதை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன.

## அல்குர்ஆன் குறிப்பிடும் ஆதாரங்கள்

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَٱللَّهُ
غَفُورٌ رَّحِيمٌ ﴿٣١﴾

'(நபியே மனிதர்களை நோக்கி) கூறுங்கள்: நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்துவிடுவான். அல்லாஹ் மிக மன்னிப்பவனும் நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கின்றான்' *(3:31)*

مَّن يُطِعِ ٱلرَّسُولَ فَقَدْ أَطَاعَ ٱللَّهَ

'எவர் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) கட்டுப்பட்டு நடக்கிறாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டார்' *(4:80)*

وَمَآ ءَاتَىٰكُمُ ٱلرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمْ عَنْهُ فَٱنتَهُوا۟

'நம்முடைய தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் மனமுவந்து எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதைவிட்டு நீங்கள்விலகிக் கொள்ளுங்கள்.' *(59:07)*

## ஸுன்னா குறிப்பிடும் ஆதாரங்கள்

'நிச்சயமாக எனது இறைவன் எனக்குக் கற்றுத் தந்துள்ளவற்றிலிருந்து நீங்கள் அறியாததை உங்களுக்குக் கற்றுத்தருமாறு அவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான்' (முஸ்லிம்)

'நான் உங்களிடம் இரண்டை விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பின்பற்றி ஒழுகும் வரை வழிதவற மாட்டீர்கள். ஒன்று அல்குர்ஆன். மற்றது எனது ஸுன்னா' (முவத்தா)

'எனக்கு வழிபட்டவன் சுவர்க்கம் புகுவான். மாறு செய்தவன் நிராகரித்து விட்டான்' (பைஹகி) போன்ற ஹதீஸ்கள் ஸுன்னாவை ஏற்க வேண்டுமென வலியுறுத்துகின்றன.




எனவேதான், அல்குர்ஆனை வஹி மத்லுவ்வு எனவும், ஸுன்னாவை வஹி கைரு மத்லுவ்வு எனவும் வழங்கி வருகின்றோம்.

அல்குர்ஆன் பல இடங்களில் (கிதாப் (வேதம்) என்ற சொல்லுடன் ஹிக்மா (ஞானம்) என்ற சொல்லையும் இணைத்துக் கூறுகின்றது. 'அத்தூதர் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து அவர் களைப் பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் (ஹிக்மா) கற்றுக்கொடுக்கிறார்.' (62:2)

மேலே வந்துள்ள ஞானம் என்ற சொல் ஸுன்னாவையே குறிப்பதாக இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். 'எனக்கு அல்குர்ஆனும் அதனோடு இணைந்து அதனை ஒத்த இன்னொன்றும் அருளப்பட்டது' என்ற ஹதீஸை அதற்கு ஆதாரமாகக் குறிப்பிடுகின்றார்கள்.

அல்குர்ஆனும், ஸுன்னாவும் ஒன்றிலொன்று தங்கி நிற்கும் முழுமையான அங்கமாகும். அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இடையிலான தொடர்பு ஒரு புத்தகத் துக்கும் அதனை இருளில் வாசிக்கத் துணை புரியும் வெளிச்சத்துக்குமிடையேயுள்ள தொடர்பு போன்றது. எனவே, ஸுன்னாவைப் புறக்கணித்து அல்குர்ஆனை விளங்கவோ, செயற்படுத்தவோ, சட்டம் வகுக்கவோ முடியாது.

இதற்கான சில உதாரணங்களை நோக்குவோம். அல்குர்ஆன் தொழும்படி ஏவுகின்றது. எவ்வாறு தொழ வேண்டும் என்பதை ஸுன்னா மூலமே அறிய முடிகிறது. தொழ வேண்டிய நேரம், தொழும் முறை, தொழுகைக்கான விதிமுறைகள் அனைத்தையும் ஸுன்னா விளக்குகின்றது.

ஒருமுறை இம்ரான் பின் ஹுஸைன் (ரழி) அவர்களிடம் ஒருவர் வந்தார். எங்களுக்கு அல்குர்ஆனைத் தவிர வேறு எதுவும் கூற வேண்டாம் என்றார். அவரைத் தமக்கு அருகே அழைத்த இம்றான் (ரழி) அவர்கள் அல்குர்ஆனில் லுஹருக்கு நான்கு ரகஅத் என்பது கூறப்பட்டுள்ளதா, கஃபாவை ஏழுமுறை தவாப் செய்ய வேண்டும். ஸபா - மர்வாவுக்கிடையில் ஏழு முறை ஸஈ செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளதா என வினவி ஸுன்னாவின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டினார்கள்.

மற்றொருவர் அப்துல்லா இப்னு உமர் (ரழி) அவர்களிடம் கஸ்ர் - ஜம்உ தொழுகை அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதா எனக் கேட்டார். அவ்வேளை, சகோதரா, எங்களுக்கு அல்லாஹ், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தூதராக அனுப்பினான். அவர்கள் போன்றே நாமும் செய்கிறோம் (முவத்தா) என்றார்கள்.

இவ்வாறே சட்ட விதிகள் தொடர்பான விளக்கத்துக்கும் ஸுன்னா தேவைப்படுகிறது. உதாரணமாக திருட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் கை துண்டிக்கபட வேண்டுமென அல்குர்ஆன் கூறுகிறது. ஆனால் ஸுன்னாவோ சிறுவர் மற்றும் மன நோயாளர்களுக்கு விதிவிலக்களிக்கிறது. அத்துடன் திருடப்பட்ட பொருள் கவசத்தின் பெறுமதியைவிட அதிகமானதாக இருக்க வேண்டும். மணிக்கட்டு வரையான கையே துண்டிக்கப்பட வேண்டும். உணவுப் பொருட்கள் திருடப்பட்டதற்காக இத் தண்டனை வழங்கப்பட முடியாது என்பன போன்ற விளக்கங்கள் ஸுன்னா மூலமே பெறப்படுகின்றன.

தவிர, ஜனாஸாத் தொழுகை, ஸகாத்துல் பித்ர், இஹ்ராம் ஒழுங்கு போன்ற செயற்பாடுகள் ஸுன்னா மூலமே விளக்கப்பட்டுள்ளன என்பதும் நோக்கத்தக்கதாகும்.

ஸுன்னாவைப் பாதுகாப்பதற்காக ஸஹாபாக்களும், தாபிஈன்களும், தொடர்ந்து வந்தவர்களும் எடுத்த முயற்சிகள் ஸுன்னாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. ஸஹாபாக்கள் ஹதீஸ்களைப் பிழையில்லாமல் மனனமிட்டார்கள். எழுத்தறிவுள்ளோர் எழுதிப் பாதுகாத்தார்கள். தமக்குத் தெரிந்த ஹதீஸ்களைச் சாட்சிகளுடன் ஒப்படைத்தார்கள்; அறிவித்தார்கள்; ஹதீஸ்களை நடைமுறைப்படுத்தினார்கள். பிற்காலத்தில் வந்த அறிஞர்கள் ஹதீஸ்களை அறிய பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஹதீஸ்களைத் தெரிந்து வைத்திருந்தவர்களை நேரடியாகத் தேடிச் சென்றார்கள். போலியான ஹதீஸ்களிலிருந்து உண்மையான ஹதீஸ்களைக் கண்டறிய கடுமையான ஆய்வுகளை மேற்கொண்டார்கள். ஹதீஸ் நூல்களைத் தொகுத்தார்கள். பிரச்சினைகள் தோன்றியபோது ஹதீஸ்களின் துணையுடன் தீர்வுகளைக் கண்டறிந்தார்கள். கலாபீடங்களை உருவாக்கினார்கள்.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து ஸுன்னாவின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட நாம் அதனை விளங்கி வாழ்வில் நடைமுறைப்படுத்தி வருவோம்.

**பயிற்சி**

1. ஸுன்னா இஸ்லாத்தின் மூலாதாரங்களில் ஒன்றாக அமைவதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுக.
2. ஸுன்னாவைப் பாதுகாப்பதற்காக அறிஞர்கள் எடுத்து வந்துள்ள முயற்சிகளை எடுத்துக்காட்டுக.
3. ஸுன்னா இன்றி அல்குர்ஆனைச் சரியாக விளங்க முடியாது என்ற கருத்தை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்துக.